பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 01 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையுடன் வரும் **28**-ஆம் தேதி தொடங்குகிறது.

**2.** தில்லியில் காற்று மாசை குறைப்பதற்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

**3.** நடப்பு நிதியாண்டில் நேரடி வரி வசூல் **4** புள்ளி ஒன்று நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

**4.** மேற்குவங்க மாநிலத்தில், நிஃபா வைரஸை கட்டுப்படுத்த தேசிய கூட்டுப் பணிக் குழு பணியமர்த்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**5.** மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், உத்தரப்பிரதேச அணிக்கு எதிரான ஆட்டத்தில் **9** விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையுடன் வரும் 28-ஆம் தேதி தொடங்குகிறது.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.

30 அமர்வுகளை கொண்ட இந்த கூட்டத்தொடர் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

முதல்கட்ட பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறும்.

இரண்டாம் கட்ட கூட்டத்தொடர் மார்ச் 9-ஆம் தேதி தொடங்கி, ஏப்ரல் 2-ஆம் தேதிவரை நடைபெறும்.

<<<<>>>>

தில்லியில் காற்று மாசை குறைப்பதற்கான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், நவீன போக்குவரத்து மேலாண்மையை

செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள 62 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 88 நிறுவனங்களுக்கு மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கிராமப்புற வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏற்கனவே இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் உள்ள இடைவெளிகளை களைவதற்கு இந்தப் புதிய சட்டம் வகை செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது விவசாயிகள் மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

முறைகேடுகளை களைவதற்கும், தணிக்கை உள்ளிட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கான அம்சங்கள் இந்தப் புதிய சட்டத்தில் இடம்பெற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிக்க இந்தச் சட்டம் உதவிடும் என்றும் திரு. மனோகர் லால் கூறினார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில் நேரடி வரி வசூல் 4 புள்ளி ஒன்று நான்கு சதவீதம் அதிகரித்துள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வருமான வரித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், நடப்பு நிதியாண்டில் நிகர நேரடி வரி வருவாய் 18 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பெரு நிறுவனங்கள் செலுத்தி வரி வருவாய் 8 லட்சத்து 63 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில் நேரடி வரி வசூல் 25 லட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<>>>>

நிதிசார் சேவைகளை டிஜிட்டல்மயமாக்கும் நடவடிக்கைகள் நிதி பரிவர்த்தனைகளை திறம்பட மேற்கொள்வதற்கு உதவியுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நிதி பரிவர்த்தனைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது பெரிதும் உதவிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் வங்கி நடவடிக்கைகளில் தொழில்நுட்பங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் வேளாண் நடைமுறைகளுடன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக அபுதாபியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி,

பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் வகையில் இந்தியாவில் எரிசக்தி பாதுகாப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தும் வகையில் 10 லட்சத்திற்கும் அதிகமான சூரிய சக்தியில் இயங்கக் கூடிய பம்ப்செட்டுகள் பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டைக் கட்டமைப்பதற்கான நடவடிக்கைகளில் நம்பிக்கை, புத்தாக்கம் மற்றும் குறிக்கோளுடன் கூடிய இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று மத்திய துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், சுவாமி விவேகானந்தரின் போதனைகள் இளையோருக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

திறன் மேம்பாடு உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிக்க உதவிடும் என்று திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில், நிபா வைரஸை கட்டுப்படுத்த உதவிடும் வகையில், தேசிய கூட்டுப் பணிக் குழு பணியமர்த்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக காணொளி ஒன்றை பகிர்ந்து கொண்டுள்ள மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா, வைரஸ் பரவளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் மாநில அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று கூறியுள்ளார்.

வைரஸ் பரவல் குறித்த தகவல் கிடைத்தவுடன், அம்மாநில முதலமைச்சர் செல்வி மமதா பானர்ஜியுடன் தாம் ஆலோசனை நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மத்திய சுகாதாரத்துறை செயலாளர், அம்மாநில தலைமை மற்றும் முதன்மை செயலாளர்களுடன் உடனடியாக ஆலோசனை நடத்தி வைரஸ் பரவாமல் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேசியதாகவும் திரு ஜே பி நட்டா குறிப்பிட்டுள்ளார்.

கல்யாணியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆய்வகத்தில், இரண்டு பேருக்கு நிபா வைரஸ் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்களை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.

தூய்மையான கழிவறை குறித்த ஓவியப் போட்டியை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்த ஆண்டு ஜூன் 30ஆம் தேதி வரை நடத்துகிறது.

தேசிய நெடுஞ்சாலைகளில் கழிப்பறை வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், தூய்மையைப் பராமரிக்கும் வகையிலும் பல்வேறு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பு வசதிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக கல்வி, தொழில்துறை மற்றும் எதிர்கால தொழில்நுட்பங்களில் போதிய பயிற்சியும் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வியுடன் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

அமெரிக்காவில் உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் குடியேற்றச் சட்ட அமலாக்கம் உட்பட மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக ஒரு லட்சத்திற்கும் அதிகமான விசாக்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க குடியேற்ற அலுவலகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பாதுகாப்பு

காரணங்களுக்காக விசாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள **8** ஆயிரம் மாணவர்கள் மற்றும் **2** ஆயிரத்து **500** சிறப்பு விசாக்கள் இதில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசா பெற்றுள்ள வெளிநாட்டவர்கள் அமெரிக்காவின் சட்ட விதிகளை மதித்து நடக்க வேண்டும் என்றும் அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, பஞ்சாப் உள்ளிட்ட பகுதிகளில் கடும் பனிப்பொழிவு நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், ஜார்கண்ட், ஒடிசா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் ஒருசில இடங்களில் பனிப்மொழிவு தொடர்ந்து நீடிக்கும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை தொடர்ந்து அதே நிலையில் நீடிக்கும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற உத்தரபிரதேச அணிக்கு எதிரான போட்டியில், 9 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

நவிமும்பையில் இப்போட்டி இன்றிரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

---------------

சென்னை சர்வதேச டென்னிஸ் போட்டி நேற்று தொடங்கியது. இப்போட்டி வரும் 18ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. முதல் சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகின்றன.

இதில் 14 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்-வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**